1984 பிப்ரவரி 23]

இந்த கறுப்புப் பணத்தை ஒழிப்பது என்பது மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டிய விவகாரம். ஆகவே அதை ஒழிக்க மத்திய அரசிற்கு தமிழக அரசு ஆலோசனை செய்து உள்ளதா? குறிப்பாக 100 ரூபாய் நோட்டை செல்லாது என்று அறிவிக்க மத்திய அரசிற்கு ஆலோசனை சொல்லப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை.

தொடர்ந்து நெல்பயிர் செய்வதால் வயல்களில் ஏற்படும் துத்தநாகப் பற்றாக்குறை.

142—(*வினா எண். 19308)—திரு. சி. கணேசன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொடர்ந்து ஒரே இடத்தில் நெல் பயிர் செய்வதால் துத்தநாகப் பற்றாக்குறை ஏற்படுகிறது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அக்குறையைப் போக்க விவசாயப் பல்கலைக் கழகம் ஆராய்ந்து செயல்படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் நமது மாநிலத்தின் பல பகுதிகளில் செய்த ஆராய்ச்சியின் மூலம் துத்தநாகப் பற்றாக்குறை நெல் வயல்களில் வெகுவாக இருப்பதை கண்டறிந்துள்ளது. இப்பற்றாக்குறை வராமல் தடுக்க, நெல் நடவு செய்யுமுன்பாக ஏக்கர் ஒன்றுக்கு 10 கிலோ அல்லது எக்டேர் ஒன்றுக்கு 25 கிலோ துத்தநாக சல்பேட் இட வேண்டும்.

உற்பத்தியை அதிகரிக்க கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய ரக கரும்பு.

143— (*வினா எண். 19458)—திரு. சீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத்தில் கரும்பு உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு புதிய ரக கரும்பு கண்டு பிடிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) அந்த ரக கரும்பு பயிரிட எந்தெந்த மாவட்டங்களுக்கு ஏற்றது?

(இ) ஒரு ஏக்கருக்கு மகசூல் எவ்வளவு வருகிறது?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) ஆம். கோ. க. 8001, கோ.க. 8201 ஆகிய இரு புதிய ரகங்கள் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன.

(ஆ) கோ. க. 8001, செங்கற்பட்டு, தென்னாற்காடு மாவட்டங்களுக்கு ஏற்றது. பிற மாவட்டங்களிலும் பயிரிட லாம்.

கோ. க. 8201 எல்லா மாவட்டங்களுக்கும் ஏற்றது.

(இ) கோ. க. 8001 ஏக்கருக்கு 42 டன்கள் மகசூல் தரும்.

கோ. க. 8201 ஏக்கருக்கு 45 டன்கள் முதல் 56 டன்கள் வரை மகசூல் கொடுக்கவல்லது.

திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு விவசாயத்தில் விவசாயிகளுக்கு பயன் அளிக் கிற வகையில் ஒரு குறுகிய காலப் பயிரைக் கண்டுபிடிக்க அரசு முயற்சி எடுத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, யூனிவர்சிடியில் இது தொடர்பாக தொடர்ந்து ஆராய்ச்சி மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வறட்சி, வெள்ளம் என்று மாறி மாறி வருகிற காரணத்தால் இரண்டையும் தாங்கக் கூடிய விதத்தில் குறுகிய கால பயிராக புதிய ரகத்தைக் கண்டுபிடிக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட 8001 என்கிற ரகம் வறட்சியைத் தாங்கக் கூடிய சக்தி கொண்டதாகும்.

திரு. தி. க. நல்லப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, புதிய புதிய ரகங்களை-கரும்பில் எத்தனையோ ரகங்கள்-அரசு கண்டு பிடிக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டாலும், அவற்றின் விலை குறைவாக இருப்பதால் அவைகளைப் பயிர் செய்ய விவ சாயிகள் தயங்குகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு விலையை அதிகப்படுத்திக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர் களே, நியாயமான விலை வழங்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS